Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 68/2017 PW-5**

Name : தமிழ்செல்வன்
Father / Husband name : கோபால்
Village : பாதூர்
Age : 61
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.09.2025

A1, A2 appearance dispensed with. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பாதூரில் வசிக்கிறேன். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தற்போது விவசாய வேலைசெய்கிறேன். இதற்கு முன்பாக கேடிஆர் மேன்சனில் மேலாளராக வேலை செய்தேன். அந்த மேன்சன் 1வது எதிரி தேவராஜ்க்கு சொந்தமானது. நான் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வேன். அ.சா.1 மங்கை என்பவரை எனக்கு தெரியும். அவர் மேன்சனுக்கு வந்தபோது நான் பார்த்தேன். எதற்காக வந்தார் என்று தெரியாது. அ.சா.1 ன் கணவர் மற்றும் விலாசம் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4 கிரைய ஒப்பந்தத்தில் 4வது பக்கத்திலுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தபோது மேற்படி ஆவணத்தை என்னிடம் காட்டினார்கள்.

2. மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் 2வது சாட்சி கையொப்பம் யாருடையது என்று தெரியவில்லை. 1வது எதிரியின் தம்பியின் பெயர் தெரியாது. 1வது எதிரியின் அப்பாவின் பெயர் நினைவில்லை, அவரின் வீடு திண்டிவனம் பழைய

நீதிமன்றத்திற்கு பின்னால் உள்ளது. 1வது எதிரியின் உடன் பிறந்தவர்கள் பற்றி தெரியாது. சுமார் 18 வருடத்திற்கு முன்பாக நான் வேலை செய்த மேன்சனில் 1வது எதிரி அவரின் அலுவலகத்திற்கு என்னை அழைத்து சாட்சி கையொப்பம் செய்யச்சொன்னார் நான் செய்தேன். அப்போது மங்கை அங்கிருந்தார். நிலம் சம்மந்தமக பேசிக்கொண்டிருந்தார்கள், மற்ற விவரம் தெரியாது. அங்கிருந்த ஒரு பெண் மங்கை என்று கையொப்பம் செய்தார், அதன் மூலம் மங்கை என்று தெரிந்துகொண்டேன். அதற்கு முன்பாக மங்கையை நான் பார்த்தது இல்லை.

3. நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. 1996 - 1999 வரை பாதூர் கிராம தலைவராக இருந்தபோது நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வேன், பின்னர் தமிழில் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்யும்போது என்னை தவிர எனது முதலாளி 1வது எதிரி, மங்கை மற்றும் சண்முகம் என்பவர் இருந்தார், அவரது அப்பாவின் பெயர் கிருஷ்ணன், அவரின் விலாசம், தொழில் தெரியாது. சண்முகம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். நான் கையொப்பம் செய்த பின்னர் மேன்சனில் வேலையிருந்ததால் நான் அங்கு சென்றுவிட்டேன். அவர்கள் எதற்காக கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

கேடிஆர் மேன்சனில் 2001 வருடத்திலிருந்து 5 ஆண்டுகள் வேலை செய்தேன். கேடிஆர் எனது உறவினரா என்றால் இல்லை. 2001ம் வருடத்திலிருந்து கேடிஆர் ஐ தெரிந்துகொண்டேன், வேலையை விட்டு நின்றபிறகு அவருடன் பழக்கம் இல்லை. எனது மச்சானுக்கு கேடிஆர் 2001 ம் வருடத்திற்கு முன்பே பழக்கம் என்றால் தெரியாது. மங்கை என்பவரை நான் பார்த்தது இல்லை என்றாலும், வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான்

1வது எதிரியிடம் வேலை செய்ததால் அவருக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சங்கர் மற்றும் சண்முகம் ஆகியோர் மங்கை என்பவரை ஏமாற்றுவற்காக எதிரிகள் கேட்டுக்கொண்டதால் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எந்த வருடத்திலிருந்து நான் தமிழில் கையொப்பம் செய்கிறேன் என்றால் சுமார் 10, 15 வருடமாக 2010ம் வருடத்திலிருந்து தமிழில் கையொப்பம் செய்கிறேன். போலிசார் என்னை விசாரித்தபோது மேன்சனில் கையொப்பம் செய்த மங்கை என்பவர் புகார் அளித்ததாக தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும்போது மங்கை கையொப்பம் செய்த பிறகு தான் நான் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் மங்கை எனக்கு முன்பாக கையொப்பம் செய்ததற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். போலிசார் விசாரித்த பின்பு மேன்சனில் கையொப்பம் செய்த மங்கை இவ்வழக்கை நடத்துவதாக தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான், போலிசார் விசாரித்தபோது தெரிந்துகொண்டேன்.

Sd/ M.Elavarasi,

Judicial Magistrate No.1, Tindivanam